பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2051 | வைகாசி 06 | செவ்வாய்க்கிழமை | 19.05.2020 | கதிர் 195

## கொரோனா 991

கொழும்பு, மே 19
இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான பத்து புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இலங்கை தொற்று நோயியல் பிரிவு இதனை அறிவித்துள்ளது. பக்கம் 12 »

# தமிழருக்கு நீதி தாமதமாகலாம் ஆனால் நிச்சயமாக கிடைக்கும்



### நம்பிக்கையூட்டுகிறார் ஜஸ்மின் சூக்கா

கொழும்பு, மே 19
முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட தமிழினப் படுகொலைகளுக்கான நீதி தாமதமாகலாம். ஆனால் நிச்சயம் கிடைக்கும். அதுவரை நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது எனச் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்று இயக்குநர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.
முள்ளி பக்கம் 12 »

### இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பதினொரு பேரை இரண்டு வாரங்களுக்குத் தனிமைப்படுத்தும் உத்தரவை வழங்கும்படி கோரி நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்தை பக்கம் 02 »

# தடைகள் தாண்டி தமிழர் தாயகமெங்கும் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 19
11 ஆண்டுகளுக்கு முன்னர், முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் கொன்று குவிக்கப்பட்டதை நினைவு கூரும் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகத்தில் பரவலாக இடம்பெற்றுள்ளன.

கடந்த 5 ஆண்டுகளைவிட இம்முறை பொலிஸாரின் கெடுபிடிகளால் திட்டமிட்டவாறு பல இடங்களில் நிகழ்வுகள் இடம்பெறாமல் மாற்று இடங்களில் நினைவேந்தல்கள் இடம்பெற்றன.

முள்ளிவாய்க்காலில், பிரதான நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்ற அதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில், பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள நினைவாலயத்தில் காலையில் நிகழ்வு இடம்பெற்றது.

முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வீ. விக்னேஸ்வரனின் தலைமையில் அவரது இல்லத்தில் நேற்று முற்பகல் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் நேற்றுக் காலை சாவகச்சேரி கிளை அலுவலகத்தில் இடம்பெற்ற பக்கம் 02 »



# பொறுப்புக்கூறலை இலங்கை அரசு தொடர வலியுறுத்துகின்றது கனடா!

### கிளிநொச்சியில் நினைவேந்தல்

கிளிநொச்சி, மே 19
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி இடம்பெற்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி அலுவலகத்தில் இந்த நிகழ்வு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் பக்கம் 12 »

### முள்ளிவாய்க்கால் நினைவு தினமான நேற்று அந்த நாட்டுப் பிரதமர் ஜஸ்ரின் அறிக்கை

மொன்றியல், மே 19
கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்வது எதிர்காலத்தை உருவாக்குவதற்கு முக்கியமானது எனத் தெரிவித்துள்ள கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே, அர்த்தமுள்ள நீதி மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையைத் தொடருமாறும் இலங்கைக்கு அழைப்பு விடுத்துள்ளார். பக்கம் 02 »




## பழ.நெடுமாறன் அஞ்சலி!

சென்னை, மே 19
மே-18 தமிழினப் படுகொலை நாளை முன்னிட்டு சென்னை பல்லாவரத்தில் உள்ள தனது இல்லத்தில் ஈழப்போரில் படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு குடும்பத்துடன் சுடரேற்றி பக்கம் 12 »



## கோட்டாபய தலைமையில் இன்று போர் வெற்றி விழா!

### 14 ஆயிரத்து 617 இராணுவத்தினருக்குப் பதவி உயர்வு

கொழும்பு, மே 19
போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 11 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் 11ஆவது போர் வெற்றி விழாவை சிங்கள தேசம் இன்று கொண்டாடுகின்றது.

இந்த விழா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள தேசிய இராணுவ பக்கம் 02 »

## தேவையற்ற ஒன்றுகூடல்கள் வடக்கில் நடத்துவதற்கு தடை

### தடுக்குமாறு முப்படைகளுக்கு பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 19
வடக்கில் அவசியமற்று கூட்டம் கூடுவதை தடுக்க தனிமைப் படுத்தல் சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சு அறிவித்தெள்ளது.

நேற்று மாலை இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று பக்கம் 02 »

## தமிழரசுவும் அஞ்சலி!

யாழ்ப்பாணம், மே 19
இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் நேற்று இரவு 7 மணிக்கு தெல்லிப்பளையில் உள்ள அலுவலகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழரசுக்கட்சியின் வாலிபர் முன்னணியின் யாழ்.மாவட்டத் தலைவர் பிருந்தாபன் பக்கம் 02 »



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்று உத்தரவிட்ட யாழ்.நீதிமன்றம் நேற்றுக் காலை அந்த உத்தரவை விலக்கிக் கொண்டது.

முதல் உத்தரவு பொலிஸார் ஒரு தலைப்பட்சமாக சமர்ப்பித்த விண்ணப்பத்தின் மீது வழங்கப்பட்டது. ஆனால் நேற்றுக் காலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகமும் மற்றும் ஒரு டசினுக்கு மேற்பட்ட சட்டத்தரணிகளும் யாழ்.நீதிமன்றத்தில் முன்னிலையாகி கொடுத்த 'சூடான' விளக்கத்தை அடுத்து நீதிமன்றம் தனது முன்னைய உத்தரவை ஒருபடியாக வாபஸ் வாங்கிக் கொண்டது.

அதில் இரண்டு, மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன.

ஒன்று - தொற்று நோய் தொடர்பில் தனிமைப்படுத்தல் அதிகாரத்தைப் பிரயோகிப்பவர்கள் யார் என்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் அந்த அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்படவில்லை என்று சட்டத்தரணி புனிதநாயகம் சுட்டிக்காட்டினார்.

அதன்படி, அந்த வர்த்தமானி திருத்தப்படும் வரை, இனி யாருக்கும் தனிமைப்படுத்தல் கட்டளை வழங்குங்கள் என்று பொலிஸார் நேரடியாக நீதிமன்றுக்கு வரமுடியாது. சுகாதார அதிகாரகளைப் பிடித்துக் கொண்டு அவர்கள் மூலம்தான் நீதிமன்றுக்கு அத்தகைய கட்டளைபெற பொலிஸ் வர வேண்டும்.

அப்படி வருவது என்றாலும், தமிழர்களின் நினைவேந்தல்களைத் தடுப்பது போன்ற சிங்கள அரச எஜமானர்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான - இத்தகைய தீங்கெண்ணத்துடனான - விடயத்துக்காகத் தனிமைப்படுத்தல் உத்தரவு பெறுவதற்கு வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் சுகாதார அதிகாரிகள் யாரும் பொலிஸாருடன் முறையற்ற விதத்தில் அணி சேர்ந்து நீதிமன்றுக்கு வரவே மாட்டார்கள்.

அந்த வகையில் பொலிஸ் தரப்புக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இந்த வழக்கின் மூலம் நல்லதொரு பாடம் படிப்பித்திருக்கின்றார்கள் என்றே கூற வேண்டும்.

அடுத்தது - பொலிஸார் இந்த வழக்கு விடயத்தில் முற்றும் முழுதாக தீங்கெண்ணத்துடன் செயற்பட்டிருக்கின்றார்கள் என்பதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் புட்டுப்புட்டு வைத்திருக்கின்றனர். வடக்கில் சமூக இடைவெளி சரிவரப் பின்பற்றப்படாத பல சம்பவங்கள் தாராளமாக நடைபெற, அவற்றைப் பார்த்திருக்கும் பொலிஸார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், சிறிய எண்ணிக்கையில், சமூக இடைவெளியை விசேடமாகக் கவனித்துப் பேணி இருக்கையில், அவர்களை இலக்கு வைத்து இந்த நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்தமைக்கு அரசியல் ரீதியான காழ்ப்புணர்ச்சியும் தீங்கெண்ணமும்தான் காரணம் என்பது நீதிமன்றத்தில் அம்பலப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அடுத்தது இன்னொரு முக்கியவிடயம். பொதுத் தேர்தல் ஜுன் 20ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு இன்னும் ஒரு மாதம்தான் உள்ளது. அந்தச் சமயத்தில் - பொலிஸாரின் தீங்கெண்ண நடவடிக்கையினால் - ஒரு கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஏழு வேட்பாளர்களை (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் தனிமைப்படுத்தப்பட்ட வேண்டும் என்று நேற்று முன்தினம் நீதிமன்றம் உத்தரவிட்ட பதினொரு பேரில் ஏழு பேர் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்கள்) ஒரே சமயத்தில் பிரசார நடவடிக்கையில் இருந்து ஒதுக்கப் போகின்றீர்களா? அதுதான் பொலிஸாரின் தீங்கெண்ணத்துக்குப் பின்னால் பொதிந்து கிடக்கும் சூத்திரம். அதற்கு நீதிமன்றம் ஒத்துழைக்கப் போகின்றதா? - என்ற சாரப்பட சட்டத்தரணிகளால் பட்டவர்த்தனமாகக் கேள்வி எழுப்பப்பட, நீதிமன்றம் தனது முன்னைய உத்தரவை விலக்கிக் கொண்டது.

நாடாளுமன்றத் தேர்தலை ஜுன் 20ஆம் திகதி நடத்த முடியாது என உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. அங்கு சமர்ப்பிப்பதற்கு யாழ்ப்பாணத்தின் இந்த வழக்கு நல்ல உதாரணம்.

சமூக இடைவெளியை ஒழுங்காகப் பேணி, ஒரு சிலருடன் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்ச்சியையே தொற்றுத் தடுப்பு நடவடிக்கையின் கீழ் சாதகமான ஒன்றாகப் பயன்படுத்தி, பத்துப் பேர் கொண்ட மாவட்டத்தின் வேட்பாளர் பட்டியலில் ஏழு பேரை இலகுவாக இரண்டு வாரம் தனிமைப்படுத்தலில் வைக்கும் உத்தரவை நீதிவான் நீதிமன்றத்திடமே பெற்றுக் கொள்ளக் கூடிய சூழல் நிலவுமானால், அச்சூழலில் எப்படி நீதி, நியாயமான, பக்கச்சார்பற்ற தேர்தலை நடத்த முடியும் என்று உயர்நீதிமன்றத்திடம் கேட்கலாம்.

இந்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் ஆரம்ப வாதம் - நேற்று நான் இப்பத்தியில் கூறியபடி - மூன்று மணித்தியாலங்கள் நேற்று நடந்து முடிந்து விட்டது. இந்த வழக்கில் அது மட்டும் தான் நேற்று நடந்தது.

வழமையான வழக்கு ஒழுங்குகள், சம்பிரதாயங்கள் முடிந்து சுமந்திரன் தனது தரப்பு ஆரம்ப வாதத்தை 10.30க்கு ஆரம்பித்தார். நண்பகல் 12.30 மணிக்கு மதிய போசனத்துக்காக நிறுத்தப்பட்ட அமர்வு சுமார் அரை மணி நேரம் கழித்து பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமானது. பிற்பகல் 2 மணிக்கு தனது நீண்ட வாதத்தை சுமந்திரன் நிறுத்தியபோது அன்றைய விசாரணை அமர்வையும் மன்று முடிவுக்குக் கொண்டு வந்தது. வழக்கு விசாரணை மீண்டும் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் போது. ஐக்கிய மக்கள் சக்தியின் (சஜித் அணியின்) செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ சுமார் மூன்று மணி நேரம் தமது வாதத்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக நாட்டின் நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உரியது என்பதை விலாவாரியான விவரங்களோடு அவர் விவரிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனால் இந்த வழக்கின் மீதான விசாரணை புதன், வியாழக்கிழமைகளுக்குத் தொடர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

நேற்று முகக் கவசமும் அணிந்தபடி மூன்று மணி நேரம் தமது சட்டவாதத்தைப் புரிந்ததில் உண்மையில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் அதிகம் களைத்துத்தான் போய்விட்டார்.

அதைப் பற்றிய தகவலை நீட்டி நிமிர்த்தி எழுதி என் வாசகர்களைக் களைப்படைய வைக்க நான் விரும்பவில்லை. நேற்று வழக்கு வாதத்தின்போது நடந்த சுவாரஸியமான ஒரு சம்பவம் பற்றி மட்டும் குறிப்பிட்டு, இன்றைய பத்தியை முடித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தமது வாதத்தின் நடுவே நாட்டில் ஊரடங்குக்கு உரிய சட்டம் ஏதுமின்றியே ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்படுகின்றது, அதற்குக் காரணம் நாட்டில் சட்டத்தின் ஆட்சி செத்துவிட்டது என்பதுதான் என்றார் சுமந்திரன்.

அப்போது குறுக்கிட்ட சட்டத்தரணி ஒருவர் *"இல்லையே! உரிய சட்ட ஒழுங்கின்படிதான் ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்படுவதாக சட்டமா அதிபர் கூறியுள்ளாரே...!"* - என்று ஒரு கொமண்ட் அடித்தார். அவ்வளவுதான் சுமந்திரனுக்கு வந்ததே கோபம்.

*"யார், இப்போது பதவியில் இருக்கும் இந்தச் சட்டமா அதிபரையா கூறுகின்றீர்கள்?. மார்ச் 17, 18, 19ஆம் திகதிகளில் அரச விடுமுறையில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளனவே, அது சரியா, சட்ட ரீதியானதா என்று தேர்தல் ஆணையாளர் சட்ட விளக்கம் கேட்டதற்கு அதற்கு உருப்படியான பதில் கொடுக்கவே தெரியாத இந்த சட்டமா அதிபர் கூறுவதையா ஒரு பொருட்டாக நீங்கள் எடுத்துக் கொள்கின்றீர்கள்...?"* - என்று பாய்ந்தார் சுமந்திரன்.

இந்த நாட்டில் இப்போது நடைமுறையல் இருப்பதாகப் பொலிஸார் கூறும் ஊரடங்கு உண்மையில் சட்ட ரீதியாக உள்ளதா என்பதை உரிய முறையில் நீதிமன்றத்தில் தனியாகப் பார்த்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டு தமது வாதத்தின் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தார் சுமந்திரன்.

நாங்களும் அந்த வழக்கு விசாரணை பற்றிய விடயத்தை முடித்து, அடுத்த கட்டமாக இந்தப் பத்திக்கு இன்று முற்றுப்புள்ளி வைப்போமா?

-மின்னல்-

## தடைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

அதேவேளை இரவு 7 மணிக்கு தெல்லிப்பளையில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

தமிழரசுக்கட்சியின் வாலிபர் முன்னணியின் யாழ்.மாவட்டத் தலைவர் பிருந்தாபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, கட்சியின் பிரமுகர்கள், புளொட்டின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் மற்றும் அரசியல் பிரமுகர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் நினைவுநாளான நேற்று மாலை அல்லைப்பிட்டி புனித பிலிப்புநேரியார் தேவாலயத்தில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 100 ற்கும் மேற்பட்ட பொது மக்களின் நினைவாகவும், காணாமல் ஆக்கப்பட்ட அருட்தந்தை ஜிம்பிறவுண் நினைவாகவும் இந்த அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.

இராணுவம், பொலிஸார் இந்த அஞ்சலி நிகழ்வு நடத்துவதைத் தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருந்தபோதும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் அஞ்சலி நிகழ்வு நடத்தி முடிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன், சட்டத்தரணிகளான க.சுகாஸ், ந.காண்டீபன், திருக்குமரன், சோபிதன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களான வ.பார்த்தீபன், வை.கிருபாகரன், தனுஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சம்பவ இடத்திற்கு முதலில் பொலிஸார் வருகைதந்தனர். பின்னர் அங்கு இராணுவத்தினரையும் பொலிஸார் அழைத்திருந்தனர்.

சிறிது நேரத்தில் அங்கு குவிந்த இராணுவம் மற்றும் பொலிஸார் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், நிகழ்வினை நடத்தியவர்களை வீடியோ எடுத்திருந் தனர்.

இதன்படி படைத்தரப்பின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் எந்தவிதமான குழப்பங்களும் இல்லாதவாறு, சமூக இடைவெளியை பேணி இந்த அஞ்சலி நிகழ்வு நடத்தி முடிக்கப்பட்டது.

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

வீரர்கள் நினைவுத்தூபி வளாகத்தில் இன்று மாலை 4 மணியளவில் இடம்பெறுகின்றது.

இன்றைய போர் வெற்றி விழாவில் 14 ஆயிரத்து 617 இராணுவத்தினருக்குப் பதவி உயர்வுகளும் வழங்கப்படவுள்ளன.

இலங்கையில் இராணுவ வரலாற்றில் இடம்பெற்றுள்ள பதவி உயர்வு நிகழ்வுகளில் ஒரு நாளில் அதிக இராணுவத்தினருக்குப் பதவி உயர்வு வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

நாட்டின் பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் இராணுவத்தினருக்கு வழங்கும் கௌரவமாக இந்தப் பதவி உயர்வுகளை வழங்க வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வழமையாக இராணுவ அணிவகுப்புகள், போர் நினைவு நிகழ்வுகள் என விமர்சையாக போர் வெற்றி விழா கொண்டாடப்பட்டாலும்கூட, கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவல் காரணமாக சமூக ஒன்றுகூடல் குறித்த அச்சுறுத்தல் காணப்படும் நிலையில் ஆடம்பரமில்லாது அமைதியான முறையில் போர் வெற்றி விழா கொண்டாடப்படும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார்.

## பொறுப்புக்கூறலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

இலங்கையில் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து 11 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே கனேடியப் பிரதமர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

கனேடியப் பிரதமரின் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு;-

இலங்கையில் ஆயுத மோதல்கள் முடிவடைந்து 11வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் இந்த நாளில் யுத்தத்தில் உயிரிழந்தவர்கள், அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்கள், யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள், தொடர்பில் கரிசனை கொள்கிறேன்.

முள்ளிவாய்க்காலில் நடந்த ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் கட்டம் உட்பட 26 ஆண்டுகாலம் நீடித்த மோதல் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், போரில் காயமடைந்தவர்கள், காணாமற்போனவர்கள் அல்லது வீடுகளிலிருந்தும் சமூகங்களிலிருந்தும் இடம்பெயர்ந்தவர்களை நினைவில் கொள்ளும் நேரம் இது.

இந்தப் போரினால் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்ட பல கனேடியர்களைக் கடந்த 11 ஆண்டுகளில் நான் சந்தித்தேன். கணக்கிடமுடியாத இழப்பு, மிகப்பெரிய துன்பம் மற்றும் தொடர்ச்சியான பின்னடைவுகள் பற்றிய அவர்களின் கதைகள் நீடித்த அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கித் தொடர்ந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை நினைவூட்டுகின்றன.

கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்வது எதிர்காலத்தை உருவாக்குவதற்கு முக்கியமானது. இந்நிலையில் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் செயல்முறையைத் தொடர இலங்கைக்கு விடுக்கப்பட்ட அழைப்பை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இலங்கையில் நீதி நிலைநாட்டவும் நல்லிணக்கத்தை உருவாக்கவும் கனடா தொடர்ந்து ஆதரவை வழங்கி வருகிறது. நீதியும் நல்லிணக்கமுமே நாட்டில் நீண்டகால அமைதி மற்றும் செழிப்புக்கு உறுதுணையாக இருக்கும்.

கனடா அதன் பன்முகத்தன்மையினாலும், நாட்டைத் தங்கள் வீடாக ஏற்றுக் கொண்ட பல கலாசாரங்கள் கொண்ட மக்களாலும் பலம் வாய்ந்ததாக உள்ளது. - என்றுள்ளது.

## தமிழரசுவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, கட்சியின் பிரமுகர்கள், புளொட்டின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் மற்றும் அரசியல் பிரமுகர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

## தேவையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

பாதுகாப்பு அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்த பல்வேறு கெடுபிடிகள் பொலிஸார் மற்றும் படையினரால் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் கோவிட் -19 நோய்த் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் அவசியமற்ற ஒன்றுகூடல்களைத் தடுக்க முடியும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

# முப்படையினரையும் சர்வதேசத்திடம் காட்டிக் கொடுத்தது நல்லாட்சி அரசு

## அதை மறக்க மாட்டோம் என்கின்றார் மஹிந்தர் யுத்தவெற்றி நாள் அறிக்கையில் அவர் விவரிப்பு



**நல்லாட்சி அரசாங்கம் எமது முப்படையினரை சர்வதேசத்திடம் காட்டிக் கொடுத்தமை, முப்படையில் தற்போது பணியாற்றுகின்ற மற்றும் ஓய்வு பெற்ற அதிகளவான வீரர் களை வேட்டையாடி, அவமானத்திற்கு உட்படுத்தியமையை நாம் ஒருபோதும் மறந்து விட மாட்டோம். அவ்வாறு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி நிலைநாட்டப்படும் என்பதை நாம் மீண்டும் உறுதியளிக்கிறோம்.**

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. புலிகள் அமைப்புக்கு எதிரான யுத்த வெற்றி யின் 11 ஆவது ஆண்டுப் பூர்த்தியை ஒட்டி அவர் வெளி யிட்டுள்ள அறிக்லையிலேயே அவர் இதனைத் தெரி வித்திருக்கின்றார். அந்த அறிக்கையின் விவரம் வரு மாறு:–

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான யுத்த வெற்றியின் பதினோறாவது ஆண்டுப் பூர்த்தியை நாம் மே மாதம் 19 ஆம் திகதி கொண்டாடுகிறோம். அது தமிழ் மக்களுக்கு எதிரானதொரு யுத்தம் அல்ல. மாறாக அமெரிக்காவின் எவ்.பீ.ஐ. நிறுவனத்தினால் உலகின் கொடூரமான தீவிரவாதிகள் எனப் பெயரிடப்பட்ட அமைப் பொன்றுக்கு எதிரான யுத்தமாகும். புலிகள் அமைப்பின் தோல்வி காரணமாக தற்போது தமிழ் மக்களும் சுதந் திரமாக வாழ்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தற் போது தமிழ் சிறுவர்கள் புலிகள் அமைப்பினால் கடத் திச் செல்லப்படுவதில்லை. தமிழ் அரசியல்வாதிகள் புலிக் கொலையாளிகள் தொடர்பான அச்சத்துடன் வாழ்வதில் லை. புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டமை மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் தேர்தல்களை நடத் துவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளமையினால் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் இறையாண்மை அதிகாரம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

புலிகள் அமைப்புக்கு எதிரான போரில் வெற்றி பெற் றமை மூலம் முழு உலகினையும் வியப்பில் ஆழ்த்திய அந்த முப்படையினரும் பொலிஸாரும் இன்று கோவிட் – 19 அச்சுறுத்தலுக்கு எதிரான போராட் டத்தை சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து மேற் கொண்டுள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் இலங்கை கோவிட் – 19 போராட்டத்திலும் வெற்றியடைந்து வருகிறது என்பதே அனைத்து விடயங்கள் ஊடாக வும் அவதானிக்க முடிகிறது. பொதுமக்கள் மத்தி யில் நோய் பரவுவதனைத் தடுப்பதற்கு முப்படையினரும் பொலிஸாரும் ஒரு பட்டாளம் போன்று முன்நின்று ஆற் றும் பணி, கோவிட் – 19 நோயை இவ்வாறு கட்டுப்படுத்து வதில் சுகாதாரப் பிரிவினருக்கு மிகவும் உறுதுணையாய் அமைந்தது என்பதில் சந்தேகமில்லை.

தீவிரவாதம், வெள்ளப்பெருக்கு, தொற்றுநோய் போன்ற எந்தவொரு அனர்த்த சூழ்நிலையிலும் முப் படையினர் பொதுமக்களைப் பாதுகாக்கும் வகையில் முன் நின்று செயற்படுகின்றனர் என்பது இதன் மூலம் மீண்டும் உறுதியாகிறது. அதனால் இன்று சமூக மட் டத்தில் ‘சிவில்’ மற்றும் ’இராணுவம்’ என செயற்கையான பிளவொன்றை ஏற்படுத்துவதற்கு நல்லாட்சி அரசியல் கட்சிகள் மேற்கொண்டுள்ள வஞ்சகமான முயற்சியை நான் கண்டிக்கிறேன். ஏதாவது பதவியொன்றுக்கு ஓய்வு பெற்ற முப்படை அதிகாரியொருவரை நியமிக்கும் போது அதனை அவர்கள் ‘இராணுவ மயமாக்கல்’ என அழைக் கின்றனர்.

ஓய்வு பெற்ற முப்படையினரும் சிவில் பிரஜைகளே. அவர்கள் இராணுவ உறுப்பினர்கள் அல்லர். அன்று இருந்த சங்க, மருத்துவர், ஆசிரியர், உழவர், தொழி லாளி சக்தியுடன் இன்று படையினரும் இணைந்துள்ள னர். எனவே நிச்சயமாக எமது அரசாங்கம் அதிகாரத்தி லுள்ள போது பாதுகாப்புப் படையினரைச் சேர்ந்த முன் னாள் வீரர்கள் அரசாங்கத்தில் பல்வேறுபட்ட பதவிகளை வகிப்பார்கள்.

ஜனநாயக முறைமைக்கு அப்பால் வந்த அனைத்து சவால்களையும் தோற்கடித்து, இந்த நாட்டு மக்களின் சர்வஜன வாக்குரிமை அடிப்படையிலான இறையாண்மை அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கு முப்படையினரும் பொலிஸாரும் ஆற்றியுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பணியையும் நாம் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர வேண்டும். முழு உலகினையும் வியப்பில் ஆழ்த்திய யுத்த வெற்றியின் பதினோறாவது ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் நல்லாட்சி அரசாங்கம் எமது முப்படையினரை சர்வதேசத்திடம் காட்டிக் கொடுத் தமை, முப்படையில் தற்போது பணியாற்றுகின்ற மற்றும் ஓய்வு பெற்ற அதிகளவான வீரர்களை வேட்டையாடி, அவமானத்திற்கு உட்படுத்தியமையினை நாம் ஒருபோ தும் மறந்து விட மாட்டோம். அவ்வாறு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி நிலைநாட்டப்படும் என்பதை நாம் மீண்டும் உறுதியளிக்கிறோம்.

# தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் அல்லைப்பிட்டியில் நேற்று நினைவேந்தல்









தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் இன படுகொலையின் நினைவு நாளான நேற்றையதினம் மாலை அல்லப்பிட்டி புனித பிலிப்னேரியர் தேவாலையத்தில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 100 ற்கும் மேற்பட்ட பொது மக்களின் நினைவாகவும், காணாமல் ஆக்கப்பட்ட ஜிம்பிரிவுன் பாதிரியாரின் நினைவாகவும் இந்த அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.

இராணுவம், பொலிஸார் குறித்த அஞ்சலி நிகழ் வினை நடத்துவதை தடுப்பதற்கு சில முயட்சிகள் மேற்கொண்டிருந்த போதும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் குறித்த அஞ்சலி நிகழ்வு நடத்தி முடிக்கப்பட்டது.

கொரோனா இடர் காலத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுகளை நடத்திய தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரை தனிமைப்படுத்துமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத் தரவிட்டது.

இருப்பினும் நேற்று மீளாய்வு மனுவை தமிழ் தேசிய மக்கள் முன்னனி சார்பில் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தாக்கல் செய்திருந்தார்.

அந்த வழக்கு விசாரணையின் போது மேற்படி உத்தரவு மீளப்பெறப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று மாலை அல்லப்பிட்டி படு கொலையை நினைவு கூரும் வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் மேற்படி அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலா ளர் செல்வராஜா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன், சட்டத்தரணிகளான க.சுகாஷ், ந.காண்டீபன், திருக்குமரன், சோபிதன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களான வ.பார்த்தீபன், வை.கிருபாகரன், தனுஜன் ஆகியோர் கலந்து கொண் டனர்.

சம்பவ இடத்திற்கு முதலில் பொலிஸார் வருகை தந்தனர். பின்னர் அங்கு இராணுவத்தினரையும் பொலிஸார் அழைத்திருந்தனர்.

சிறிது நேரத்தில் அங்கு குவிந்த இராணுவம் மற்றும் பொலிஸார் அந்த நிகழ்வுகளை நடத்துவ தற்கு எதிர்ப்புத் தெரிவித்தமையுடன், நிகழ்வை நடத் தியவர்களை வீடியோ எடுத்திருந்தனர்.

இதன்படி படைத்தரப்பின் அச்சுறுத்தலுக்கு மத்தி யில் எந்தவிதமான குழப்பங்களும் இல்லாதவாறு, சமூக இடைவெளியைப் பேணி இந்த அஞ்சலி நிகழ்வு நடத்தி முடிக்கப்பட்டது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதி கேட்கும் எம் கோரிக்கை எப்போதும் உயிர்ப்புடன் இருக்கட்டும்

முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வடிவங்களில் ஒன்று முற்றுப்பெற்று விட்டது.

ஆனால் அதை அடக்குவதற்காக இலங்கை அரசு - பௌத்த, சிங்கள பேரினவாதம் - புரிந்த கொடூரம், இழைத்த அட்டூழியம், மேற்கொண்ட நாசகாரம் கட்டுக் கடங்காதவை. சொல்லில் வெளிப்படுத்தி விட முடியாதவை.

அவை, யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்ற கொடூர வகைக்குள் அடங்குவன.

இவ்வளவையும் அநாயசமாகப் புரிந்து விட்டு, அதற்காகக் கூனிக்குறுகாமல் தன்னை ஒரு நாடு என்று அழைக்கும் கௌவரத்தோடு இலங்கைத் தீவு நிமிர்ந்து நிற்பதுதான் மனிதப் பேரவலத்தின் பெருங்கொடூரமாகும்.

இறுதிப் போர்க் காலம்வரை யுத்தக் குற்றங்களைப் புரிந்தோர், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை இழைத்தோர், அடிப்படை மனித உரிமைகளை மீறியோர், இனவழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தோர் யாருமே இதுவரையில் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. சட்டத்தினால் தண்டிக்கப்படவில்லை. பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை குறித்து மணிக்கணக்கில் பேசியோர், அந்தக் கவுன்ஸில் ஊடாக, இலங்கைப் பேரினவாதிகளும், அராஜகம் புரிந்தோரும், சிங்களத் தீவிரப் போக்குடைய வன்முறைவாதிகளும் இப்பிரச்சினைகளில் இருந்து தப்பிப் போவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் விதத்தில் அவர்களுக்குக் கால அவகாசம் பெற்றுக்கொடுத்தனரே தவிர உருப்படியாக ஏதும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டே நீளுகின்றது.

*"இறுதிப் போரில் எங்கள் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு நீதிகோரி சர்வதேச சமூகத்தில் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அந்த நீதி பதினொரு வருடங்களாகியும் எமக்குக் கிட்டவில்லை. ஆனால், நாங்கள் இதனைக் கைவிடாமல் எங்கள் மக்களுக்கு நீதி கிட்டும் வரை - இறுதிவரை - போராடுவோம் என்ற உறுதி மொழியைக் கூறி வைக்கிறோம்"* - என்று நேற்றைய முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டித் தாம் வெளியிட்ட செய்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் இவ்விடயங்களை சர்வதேச மட்டத்தில் கையாண்டு வருபவருமான சுமந்திரன் கூடக் கூறியிருக்கின்றார்.

நீதிக்காக - பொறுப்புக் கூறலை நிலைநாட்டுவதற்காக - சளைக்காது போராடுவது என்பதுதான் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலத்தில் மக்களினதும் அரசியல் தலைவர்களினதும் பிரதான பேசுபொருளாக இருக்கின்றது.

அதையே தற்போது இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டிய தமது செய்தியில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்று இயக்குநர் ஜஸ்மின் சூக்கா அம்மையார் தெரிவித்திருக்கின்றார்.

*"பாதிக்கப்பட்டோரிடம் நான் கோருவது இதுதான். நம்பிக்கையை ஒரு போதும் இழந்து விடாதீர்கள். கொல்லப்பட்ட மக்கள் தொடர்பான கதையைத் தொடர்ந்து பேசிக் கொண்டிருங்கள். இதன்மூலம் அந்த மரணங்கள் அர்த்தமற்றவையாக மாறுவதைத் தடுக்க முடியும்."* - என்று அவர் கூறுகின்றமையைத் தமிழினமும் அதன் தலைவர்களும் காது கொடுத்துக் கேட்க வேண்டும்.

வருடத்துக்கு வருடம் மே 18ஆம் திகதியன்றோ, நவம்பர் 27ஆம் திகதியன்றோ சுடரேற்றி வெறுமனே நினைவேந்தல்களை நடத்துவதுடனோ அல்லது தமிழருக்கு நீதி கிட்டாமைக்கு தமிழ் தரப்பில் ஒரு சாரரின் அணுகுமுறையே காரணம் என்று மறுசாரரை அரசியல் ரீதியில் கடித்துக் குதறுவதோ பயனற்றவை.

எமக்கு ஏற்பட்ட இழப்புகள், பாதிப்புக்கள் அதற்கு நீதி கேட்கும் போராட்டங்கள், கோரிக்கைகள் குறித்து நாம் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க வேண்டும். ஆண்டுகள் கடந்தாலும் அந்த இழப்புகளுக்கு நீதி கேட்கும் எமது தாகத்தை மட்டும் உயிர்ப்புடன் வைத்திருப்போம். அது நமது வரலாற்றுக் கடமை.

# சுமந்திரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## உடனடியாக எடுக்குமாறு வலியுறுத்தி

### சம்பந்தன், மாவைக்கு குலநாயகம் அவசர கடிதம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி வழங்கிய செவ்வி தொடர்பில் முழுத்தமிழ் உலகமும் அதிக விரக்தி அடைந்துள்ளது. எனவே, எதிர்வரும் பொதுத்தேர்தலில் எமது கட்சிக்கு ஏற்படக்கூடிய பின்னடைவைத் தவிர்க்க சுமந்திரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மிகவும் அவசியமாகின்றது.

- இவ்வாறு வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா ஆகியோருக்கு அவசர கடிதம் அனுப்பியுள்ளார் இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் சூ. சேவியர் குலநாயகம்.

இலங்கை அரசியலில் தமிழனத்தின் சார்பாக முக்கிய வகிபாகம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, சுமந்திரனின் போக்குக்கு விட்டுக்கொண்டு போனால் கட்சி மட்டுமல்ல தமிழினமே தேய்ந்து போகும் எனவும் அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த 2004ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியாக இயங்கிய காலப்பகுதியில் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு எதிராக கட்சியின் மத்திய செயற்குழுவில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவ்வாறு செயற்பட்டமைக்கான முக்கிய காரணம், தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அவர் தெரிவித்த விமர்சனங்களாகும். கட்சியின் தலைமைப்பதவி மாற்றத்துக்காகவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அத்தீர்மானம் நடைமுறைப்படுத்தப் படாமல் போனமைக்கு வேறு காரணங்கள் இருக்கலாம்.

இந்த அனுபவத்தின் அடிப்படையில் எமது கட்சியின் துணைப் பொதுச்செயலாளரும் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்றத் தேர்தல் அபேட்சகருமான எம்.ஏ.சுமந்திரன் இம்மாதம் 08ஆம் திகதி அன்று சிங்கள ஊடகமொன்றுக்கு செவ்வி வழங்கியுள்ளார். அதில் தமிழினம் சார்பாக இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும் கொச்சைப்படுத்தியும், எமது கட்சி தமிழீழ விடுதலைப்புலிகள் விடயத்தில் பிழையான அணுகுமுறையைக் கொண்டிருந்தது என்ற உண்மைக்குப் புறம்பான கருத்துக்களையும் கூறியுள்ளார்.

ஆனந்தசங்கரி கொண்டிருந்த நிலைப்பாட்டை விடவும் மோசமான கருத்துக்களை வெளியிட்டதன் மூலம் தமிழ்த் தேசியத்துக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் சுமந்திரன் பெருந்துரோகம் விளைவித்துள்ளார் என்றே மக்கள் கருதுகின்றார்கள்.

தனிப்பட்ட கருத்துக்களை யாரும், எப்படியும் கொண்டிருக்க முடியும். ஆனால், ஒரு அரசியல் கட்சியில், அதுவும் இன விடுதலை, சுதந்திரத்தை நோக்காகக் கொண்டுசெயற்படும், இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து நின்றுகொண்டு கூட்டுப் பொறுப்பற்ற முறையில் சுமந்திரன் கருத்துக்கள் வெளியிடுவது கண்டிக்கத்தக்கது.

அடிப்படையில் மாறுபாடான கொள்கைகள், கருத்துக்கள் இருக்குமானால் கட்சிக்கு வெளியே சென்று கூறவேண்டும். பாகிஸ்தான் நாடு பிரித்துக்கொடுக்கும் விடயத்தில் மகாத்மா காந்தியுடனும், இந்திய காங்கிரஸ் கட்சியுடனும் முரண்பட்ட மூதறியர் இராஜாஜி கட்சியை விட்டு வெளியேறி மும்பையில் பகிரங்க கூட்டம் கூடி அதில் விளக்கமறித்தார். அது முறையானதும், அரசியல் நாகரிகமும் ஆகும்.

நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடரும் அவாவோடு எப்படியும் சொல்லலாம், செயற்படலாம் எனவும் கருதக்கூடாது.

இலங்கை அரசியலில் தமிழனத்தின் சார்பாக முக்கிய வகிபாகம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, சுமந்திரனின் போக்குக்கு விட்டுக்கொண்டு போனால் கட்சி மட்டுமல்ல, தமிழினமே தேய்ந்து போகும்.

ஆனந்தசங்கரிக்கு எதிரான தீர்மானித்தை நான் பிரேரித்து அதிக பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனால் ஆனந்தசங்கரியே தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகத் தொடர்கின்றார். இதனாலேயே இலங்கை தமிழரசுக் கட்சி மீளெழுச்சி பெற்று இன்று உயர்ந்து நிற்கின்றது. ஆனந்தசங்கரி, தமிழீழ விடுதலைப்புலிகள் மீது கொண்டிருந்த கருத்துக்களை விடவும் சுமந்திரன் மோசமான கருத்துக்களையே தற்போது கூறியுள்ளார். தமிழினத்தின் சார்பாக இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தையும் ஆயுதப் போராட்ட காலப்பகுதியில் எமது கட்சி நடந்து கொண்ட அணுகுமுறை பற்றியும் கொச்சைப்படுத்தியுள்ளார்.

இவற்றைக் கருத்தில்கொண்டு சுமந்திரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன். எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஏற்படக்கூடிய பின்னடைவைத் தவிர்க்கவும் சுமந்திரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை அவசியமாகின்றது. முழுத்தமிழ் உலகமும் சுமந்திரனின் செவ்வி தொடர்பில் அதிக விரக்தி அடைந்துள்ளது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் - என்றுள்ளது.

# வல்வையில் நேற்று விசேட பூசைவழிபாடு



யாழ்ப்பாணம், மே. 19

இறுதிப் போரில் உயிரிழந்தவர்களின் ஆத்மாசாந்தி வேண்டி, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திலும், வல்வை பாலாம்பிகா வைத்தீஸ்வரா ஆலயத்திலும் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் நாயகத்தின் ஏற்பாட்டில் ஆத்மசாந்தி பூசை நேற்று மாலை 06 மணிக்கு இடம்பெற்றது.

இதன் போது முள்ளிவாய்க்கால் நினைவு மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த விக்னேஸ்வரன், இன்று முள்ளிவாய்க்காலில் நினைவேந்தலை தடுத்த இராணுவம் பொலிஸார் அதற்குப் பல காரணங்களைச் சொன்னார்கள்,

ஆனால் 2009 ஆம் ஆண்டு இந்தப் போரை நடத்தியவர் இப்போதைய ஜனாதிபதி கோட்டா. அவர் தனது செயலை மறைக்கவே இவ்வாறான தடைகளை ஏற்படுத்தினார், அவரது உள்ளத்தில் சில பிரச்சினைகள் இருப்பதை உணர்கின்றேன், இன்றளவும் இறந்தவர்களை நினைவுகூர தடை என்றால் எம்மீது அவர்களுக்கு இருக்கும் வெறுப்பை உணரமுடிகிறது என்று கருத்து தெரிவித்தார்.

# போராட்டக்காரர்கள் மீது போலந்தில் தடியடி!




போலந்து நாட்டில் பொருளாதார ஊக்கச் சலுகைகளை அறிவிக்கக்கோரி போராட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸாரி தடியடி நடத்தினர்.

போலந்து நாட்டில் கொரோனா வைரஸுக்கு 18 ஆயிரத்து 250 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 900க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாவால் தொழில் நிறுவனங்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதால், பொருளாதார ஊக்கச் சலுகைகளை அறிவிக்கக்கோரி, தொழில்முனைவோர் உள்பட ஏராளமானோர் நேற்றுமுன்தினம் தலைநகர் வார்சாவில் போராட்டம் நடத்தினர்.

அதிக அளவில் கூடுவது சட்டவிரோதம் என்று கூறி, கலைந்து செல்லுமாறு பொலிஸார் அவர்களிடம் கேட்டுக்கொண்டனர். அதை மீறி, பொலிஸார் மீது போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து, அவர்கள் மீது கண்ணீர்புகை குண்டுகளை பொலிஸார் வீசினர். தடியடியும் நடத்தினர்.

# 91 ஆயிரத்தை கடந்தும் உயர்கிறது அமெரிக்காவில் சாவு எண்ணிக்கை



அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 91 ஆயிரத்தைக் கடந்தது.

உலகம் முழுவதும் 213 நாடுகள்/பிரதேசங்களுக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது. இந்த கொடிய வைரசுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனாலும், கொரோனாவால் ஏற்படும் தாக்கமும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

தற்போதைய நிலவரப்படி, உலகம் முழுவதும் 48 லட்சத்து 48 ஆயிரம் பேருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது. வைரஸ் பரவியவர்களில் 26 லட்சத்து 50 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 44 ஆயிரத்து 385 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள் ளது.

சீனாவின் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா அமெரிக்காவை புரட்டி எடுத்து வருகிறது. வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புகளில் அந்நாடு உலக அளவில் முதலிடத்தில் உள்ளது.

அமெரிக்காவில் தற்போது வரை 15 லட்சத்து 33 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் தாக்குதலுக்கு அங்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 91 ஆயிரத்தை கடந்துள்ளது.

## கொரோனா பரவக் காரணம் யார்? பாரபட்சமற்ற விசாரணை தேவை!

### 62 நாடுகள் இணைந்து தீர்மானமெடுத்து வருகின்றன

கொரோனா வைரஸ் பரவ காரணம் யார்? என்பது குறித்து சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டும் என இந்தியா உள்ளிட்ட 62 நாடுகள் தீர்மானம் கொண்டு வருகின்றன.

உலக நாடுகளை தொடர்ந்து அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் சீனாவின் வுஹான் நகரில் இருந்து பரவத் தொடங்கியது. வுஹானில் உள்ள ஆய்வகத்தில் இருந்து இந்த வைரஸ் கசிந்ததாகவும், உணவு சந்தையில் இருந்து பரவத் தொடங்கியதாகவும் பல்வேறு தகவல்கள் வெளியாகின. இதற்கு சீனாதான் பொறுப்பு என அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றம்சாட்டிவருகின்றன. வைரஸ் எப்படி உருவானது என்று கண்டறிய வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றன.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் உருவானது தொடர்பாக பாகுபாடின்றி, சுதந்திரமாக , விரிவான விசாரணை நடத்தக் கோரி 62 நாடுகள் கோரிக்கை வைக்க உள்ளன. உலக சுகாதார அமைப்பின் 73ஆவது கூட்டத்தில் கொரோனா வைரஸ் தொடர்பாக சுதந்திரமான விசாரணை கோரி தீர்மானம் கொண்டு வரப்பட உள்ளது.

ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இணைந்து கொண்டு வர உள்ள இந்த தீர்மானத்திற்கு இந்தியா, ஜப்பான், பிரிட்டன், நியூசிலாந்து, பிரேசில், கனடா உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தீர்மானம் விரைவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒபாமா திறமையற்ற அதிபர் டிரம்ப் நேற்று கடும் விளாசல்!

அமெரிக்க முன்னாள் அதிபரான பராக் ஒபாமா திறமையற்றவராக இருந்தார் என தற்போதைய அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு அதிபர் டிரம்பின் அரசு தவறிவிட்டதாக எதிர்கட்சிகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த நிலையில் முன்னாள் அதிபரான பராக் ஒபாமா சமீபத்தில் டிரம்ப் அரசை கடுமையாக விமர்சனம் செய்தார்.

அமெரிக்காவில் இணைய தளம் மூலம் நடந்த ஒரு பள்ளி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற ஒபாமா பேசும்போது, கொரோனா தொற்று இறுதியாக நாட்டின் திரைசீலையை கிழித்து விட்டது. அதிகாரிகளும் தாங்கள் ஒரு பொறுப்பில் இருப்பதை உணரவில்லை. நாட்டின் தலைமையிடம் இருக்கும் தோல்விகளை இந்த பெருந்தொற்று காட்டி விட்டது. குறைந்தது



கொரோனாவை கட்டுப்படுத்துவது போல நடிக்க கூட தெரியவில்லை. அமெரிக்காவின் மானத்தை வாங்கும் வகையில் தாறுமாறான கேள்விகளை ஆட்சியாளர்கள் எழுப்புகின்றனர் என்று அதிபர் டிரம்பை மறைமுகமாக விமர்சித்திருந்தார்.

ஒபாமாவின் கருத்துக்கு அதிபர் டிரம்ப் பதிலடி கொடுத்துள்ளார். வெள்ளை மாளிகையில் டிரம்ப் செய்தியாளர்களைச் சந்தித்தபோது ஒபாமா தெரிவித்த கருத்து குறித்து அவரிடம் கேள்வி கேட்கப்பட்டது.

இதற்கு பதில் அளித்து டிரம்பு கூறும்போது, ஒபாமா ஒரு திறமையற்ற அதிபராக இருந்தார். அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். அவர் முற்றிலும் திறமையற்றவர் என்று தெரிவித்தார்.

அமெரிக்காவில் இந்த ஆண்டு இறுதியில் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. டிரம்புக்கு எதிராக ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடும் ஜோபீடனுக்கு ஆதரவாக ஒபாமா தீவிரமாகப் பிரசாரம் செய்ய முடிவு செய்துள்ளார். இதையடுத்தே அவர் டிரம்பின் அரசை விமர்சிக்க ஆரம்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே அமெரிக்காவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைய தொடங்கி உள்ளதாக டிரம்ப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் டுவிட்டரில் கூறி இருப்பதாவது:-

சில விதிவிலக்குகளை தவிர அமெரிக்க முழுவதும் கொரோனா வைரசால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை சரியத் தொடங்கி உள்ளது. இது உண்மையாகவே நல்ல விடயம்தான் என்று கூறு உள்ளார்.

# ஓரின சேர்க்கையாளர்களுக்கு கொரோனாவால் பாதிப்பு!



### ஐ.நா. பொதுச் செயலாளர் எச்சரிக்கை

கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருகிறபோது, அது மாற்று பாலுறவு சமூகத்தினருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாக ஐ.நா. பொதுச்செயலாளர் எச்சரித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 17ஆம் திகதி ஹோமோபோபியா, பிபோயியா, டிரான்ஸ்போபியாவுக்கு எதிரான சர்வதேச நாளாக கடைப் பிடிக்கப்படுகிறது.

இந்த நாள் எல்.ஜி.பி.டி.ஐ. என்று அழைக்கப்படுகிற ஓரின சேர்க்கையாளர்கள், இரு பாலுறவினர், திருநங்கையர் உள்ளிட்டவர்கள் நலனுக்காக கடைபிடிக்கப்படுகிறது.

இந்த நாளையொட்டி ஐ.நா. சபை பொதுச்செயலாளர் ஆண்டனியோ குட்டரெஸ் நேற்றுமுன் தினம் ஒரு செய்தி விடுத்தார். அந்த செய்தியில் அவர், கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருகிறபோது, அது மாற்று பாலுறவு சமூகத்தினருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாக எச்சரித்துள்ளார்.

மேலும், இந்த சமூகத்தை பாதுகாப்பது சமூகத்துக்கு மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ள தருணம் இது. அவர்கள் பாரபட்சம், தாக்குதல், கொலை உள்ளிட்டவற்றை எதிர் கொள்கிற நேரத்தில், சுகாதார சேவைகளை நாடும்போது, புதிய தடைகளையும் சந்திக்கிறார்கள். இந்த சமூகத்தினரையும், அவர்களது சமூக அமைப்புகளையும் குறி வைக்க கோவிட்-19 உத்தரவுகளை பொலீஸ் துறையினர் தவறாக பயன் படுத்தி உள்ளனர் என தெரிவித்துள் ளார்.

பாகுபாடுகளுக்கு எதிராகவும், கண்ணியமாகவும், உரிமையுடனும், சுதந்திரமாகவும், சமமாகவும் வாழ அனைவருக்கும் உரிமை உண்டு என்றும் அவர் தனது செய்தியில் சுட்டிக்காட்டி உள்ளார்.

# முகக் கவசம் இல்லாவிட்டால் குவைத்தில் சிறைத் தண்டனை!



குவைத், கத்தார் நாடுகளில் வீடுகளைவிட்டு வெளியே வரும் மக்கள் முகக்கவசம் அணியாவிட்டால் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த மக்கள் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. பல்வேறு நாடுகளில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குவைத், கத்தார் நாடுகளில் வெளியே வரும் மக்கள் முகக்கவசம் அணியாவிட்டால் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தின் சுகாதார அமைச்சர் கூறும்போது, யாராவது முகக்கவசம் அணியாமல் பிடிபட்டால் அவர்கள் 3 மாத சிறை தண்டனையை சந்திக்க நேரிடும் என்று கூறி உள்ளார்.

இதேபோல் கத்தாரில் முகக்கவசம் அணியாதவர்களுக்கு அதிகபட்சமாக 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்று அந்த நாட்டு தொலைக்காட்சி அலைவரிசை ஒன்று தெரிவித்து உள்ளது.

அதேபோல் குவைத்தில் அபாரதமாக அந்த நாட்டு பணமாக 5 ஆயிரம் தினார் விதிக்கப்படுகிறது. அதே போல் கத்தாரில் அந்நாட்டு பணம் 2 லட்சம் ரியால் அபராதமாக விதிக்கப்படுகிறது. கொரோனா வைரசுக்கு கத்தார் நாட்டில் இதுவரை 15 பேர் உயிரிழந்துள்ளனர். 32 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குவைத்தில் 112 பேர் பலியாகி உள்ளனர். 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

# இந்திய வெளிமாநிலத் தொழிலாளர்களிடம் மோழ, நிர்மலா மன்னிப்பு கேட்கவேண்டும்

## காங்கிரஸ் கட்சி வலியுறுத்து

இந்தியாவில் வெளிமாநிலத் தொழிலாளர்களிடம் பிரதமர் மோடி, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தியா முழுவதும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தர



வால் வெளிமாநிலத் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள புலம்பெயர்ந்த வெளி மாநிலத் தொழிலாளர்கள் போக்குவரத்து முடக்கத்தால் சொந்த ஊர் செல்ல முடியாமல் அவதிப்பட்டனர். கடந்த 1 ஆம் திகதிதி முதல் அவர்கள் சிறப்பு ரெயில்கள் மூலம் சொந்த ஊருக்கு திரும்புகிறார்கள். ஏராளமான தொழிலாளர்கள் நடை பயணமாகவும், சைக்கிள் மூலமும் ஊருக்கு செல்கின்றனர்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சொந்த ஊருக்கு திரும்பும்போது விபத்துக்களை சந்தித்து பலியாகும் சம்பவங்களும் அதிகரித்துள்ளது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக மத்திய அரசு பல்வேறு உதவித் திட்டங்களை அறிவித்துள்ளது. புலம்பெயர்ந்த தொழிலாளர் வியத்தில் ஆளும் பா.ஜனதாவுக்கும், காங்கிரசுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் மூத்த தலைவரான ராகுல் காந்தி சமீபத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை சந்தித்து, ஆறுதல் கூறினார். இந்த வியத்தில் ராகுல்காந்தி நாடகம் செய்கிறார் என்று மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் விமர்சித்து இருந்தார்.

வெளிமாநிலத் தொழிலாளர்களின் அவல நிலையை வைத்து அரசியல் செய்வதை எதிர்க் கட்சிகள் தவிர்க்க வேண்டும். இந்த விவகாரத்தில் அரசியல் கட்சிகள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

இதற்கு காங்கிரஸ் கட்சி பதிலடி கொடுத்துள்ளது. வெளிமாநிலத் தொழிலாளர்களை 'டிராமா பாஸ்' என்று கூறிய கருத்துக்காக அவர்களிடம் பிரதமர் மோடியும், மத்திய அசமைச்சர் நிர்மலா சீதாராமும் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சி தலைமை செய்தி தொடர்பாளர் ரன்தீப் சுர்ஜீவாலா கூறியதாவது:-

வெளிமாநிலத் தொழிலாளர்களை ராகுல்காந்தி சந்தித்து ஆறுதல் கூறினார். அவர்கள் தங்களது நிலைமையை ராகுல் காந்தியிடம் விளக்கினார்கள். இதற்காக நாடகம் நடத்துவதாக கூறுவது கண்டிக்கத் தக்கது.

இதற்காக பிரதமர் நரேந்திர மோடியும், நிர்மலா சீதாராமனும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். லட்சக்கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அவமதித்தற்காக நிர்மலா சீதாராமனை நாட்டு மக்கள் விட மாட்டார்கள்.

உதவியில்லாமல், பசியுடன் தங்களது வீடுகளுக்கு நடந்து செல்லும் வெளிமாநிலத் தொழிலாளர்களின் துயரங்கள் அரசுக்கு 'டிராமாபாசி' போல இருக்கிறதா? தயவு செய்து லட்சக்கணக்கான தொழிலாளர்களை அவமதிக்காதீர்கள் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கர்நாடகாவில் ரயில், மோட்டார் சைக்கிள் சேவைகள் தொடக்கம்!

## பயணங்கள் இன்று முதல் வழமைக்கு

கர்நாடக மாநிலத்தில் பஸ் மற்றும் ரயில் சேவையை தொடங்க அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக முதல்வர் எடியூரப்பா தெரிவித்தார்.

கொரோனா வைரசை கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு இந்த மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர பிற இடங்களில் ஊரடங்கு விதிமுறைகளில் மேலும் சில தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி பொது போக்குவரத்தை அனுமதிப்பது குறித்து மாநில அரசுகள் முடிவு எடுக்கலாம் என மத்திய அரசு கூறி உள்ளது.

இந்நிலையில், 4ம் கட்ட ஊரடங்கு தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் விதிமுறைகள் தளர்வு தொடர்பாக கர்நாடக மாநிலத்தில் முதல்வர் எடியூரப்பா தலைமையில் அமைச்சர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

எடியூரப்பா தலைமையில் நடைபெற்ற கூட்டம்இக்கூட்டத்திற்கு பிறகு பேசிய முதல்வர் எடியூரப்பா, கர்நாடக மாநிலத்தில் கொரோனா பாதிப்பு இல்லாத இடங்களில், அரசு போக்குவரத்து கழக பேருந்துகள், டாக்சி, ஆட்டோ உள்ளிட்ட பொது போக்குவரத்துக்கு அனுமதி அளிக்கப்படும் என அறிவித்தார்.

'பேருந்துகளில் 30 பேர் மட்டுமே பயணிக்க வேண்டும். அனைவரும் மாஸ்க் கண்டிப்பாக அணிந்திருப்பதுடன், தனி மனித இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். ரயில்கள் மாநிலங்களுக்குள் மட்டும் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா, குஜராத், தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் கர்நாடகாவில் நுழைய தடை விதிக்கப்படுகிறது.

திரையரங்குகள், மால்கள் தவிர அனைத்து கடைகள் மற்றும் வணிக வளாகங்களும் திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், மாநிலத்தில் ஞாயிற்றுக்கிழமை மட்டும் முழு ஊரடங்கு பின்பற்றப்படும்.

டாக்சிகள், ஆட்டோ மற்றும் கேப்களுக்கு, டிரைவருடன் அதிகபட்சம் இரண்டு பயணிகள் அனுமதிக்கப்படுவார்கள். சலூன்கள் மற்றும் அழகு நிலையங்களை திறக்கலாம்.

பூங்காக்கள் காலை 7 மணி முதல் காலை 9 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் திறக்கலாம். இரவு 7 மணி முதல் காலை 7 மணி வரையிலான இரவு ஊரடங்கு உத்தரவு தொடரும். நாளை முதல் இந்த புதிய தளர்வுகள் நடைமுறைக்கு வருகின்றன' என்றும் எடியூரப்பா கூறினார்.

# தமிழகத்தில் மேலும் 536 பேருக்கு தொற்று

தமிழகத்தில் இன்று மேலும் 536 பேருக்குப் புதிதாக கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொடர்பான நேற்றைய நிலவரத்தை மாநில சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் வெளியிட்டார்.

அந்த தகவலின்படி, மாநிலத்தில் இன்று புதிதாக 536 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் கொரோனா பரவியவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 760 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 406 ஆக உயர்ந்துள்ளது.

ஆனாலும், கொரோனாவுக்கு இன்று ஒரே நாளில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் தமிழகத்தில் கொரோனாவால் இறந்தவர்களின் எண்ணிக்கை 81 ஆக அதிகரித்துள்ளது.



# இந்தியா முழுவதையும் உலுக்கும் ஒளிப்படம்!



உயிரிழந்த தனது ஒன்றரை வயது குழந்தையின் முகத்தைக்கூட கடைசியாக ஒரு முறை பார்க்கவேண்டும் என நினைத்தும் சொந்த ஊருக்கு செல்ல முடியாமல் தவித்த வெளி மாநிலத் தொழிலாளியின் நிலைமயை விளக்கும் ஒளிப்படம் ஒன்று இந்தியாவின் மனச்சாட்சியை உலுக்கியுள்ளது.

இந்தியாவில் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரு நகரங்களில் கட்டுமானத் தொழிலாளர்களாகவும் கூலித் தொழிலாளர்களாகவும் பணியாற்றுகிறார்கள். கொரோனா பெருந் தொற்றைத் தொடர்ந்து இவர்களுக்கு இருக்கும் இடங்களில் வேலையும் இல்லை. சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்லவும் முடியவில்லை.

கொரோனா வைரசை கட்டுப்படுத்துவதற்காக நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவால் இத்தகைய வெளிமாநிலத் தொழிலாளர்களே கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

அரசு தரப்பில் இருந்து சிறப்பு ரயில்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் அவை போதுமானதாக இல்லை என்ற பரவலான கருத்துக்கள் நிலவி வருகிறது. வெளி மாநிலத் தொழிலாளர்கள் இப்போதும் சாரை சாரையாக வீதி வழியாக நடந்தே ஊருக்குச் சென்று சேர்வதற்கு முயற்சித்து வருகிறார்கள்.

இவர்களை மாநில எல்லைகளிலேயே பொலிஸார் தடுத்துநிறுத்தும் சம்பவங்களும் அரங்கேறி வருகிறது.

இந்த நிலையில், உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்த தனது ஒன்றரை வயது மகனை கடைசியாக ஒரு முறை பார்ப்பதற்காக தனது சொந்த ஊருக்கு செல்ல முயன்று முடியாமல் தவித்து நின்ற ஒரு வெளி மாநிலத் தொழிலாளியின் ஒளிப்படம் கடந்த சில நாள்களாக சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது.

பிடிஐ செய்தி நிறுவனத்தின் புகைப்படக்கலைஞர் அதுல்யாதவ் இந்த புகைப்படத்தை எடுத்துள்ளார்.

இந்த புகைப்படத்தில் இருப்பவர் பீகார் மாநிலம் பிகுசாராய் பகுதியை சேர்ந்த ராம் புகர் பண்டிட் (38) ஆவார். இவருக்கு 3 பெண் குழந்தைகளும், ஒன்றரை வயதில் ஒரு ஆண் குழந்தையும் இருந்தது. ராம் மாதம் 8 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் டெல்லியில் புலம்பெயர்ந்த தொழிலாளராக கட்டட வேலை செய்து வந்தார்.

கடந்த வாரம் திங்கள்கிழமை ராமின் மனைவி அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது ஒன்றரை வயது மகன் உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்து விட்டதாக அதிர்ச்சி தரும் தகவலை தெரிவித்துள்ளார்.

இதனால் தனது மகனின் முகத்தை கடைசியாக ஒரு முறையாவது பார்த்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் ராம் சொந்த ஊர் செல்ல முடிவெடுத்தார்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு போதிய ரெயில் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்படாததால் அவர் சாலைவழியாக சொந்த ஊருக்கு நடந்தே செல்ல முடிவெடுத்தார்.

உடனடியாக டெல்லியில் இருந்தது தனது பயணத்தை தொடங்கிய ராம் டெல்லி – உத்திரபிரதேச மாநிலம் எல்லையான காசியாபாத் பகுதியை அடைந்தார். ஆனால் அவர் உத்தரபிரதேசத்திற்குள் நுழைய அம்மாநில பொலிஸார் அனுமதி மறுத்து விட்டனர். இதனால் அவர் எல்லையிலேயே மூன்று நாட்களைக் கழித்துள்ளார்.

இதற்கிடையே, ராம் உயிரிழந்த தனது மகனை பார்க்க முடியாமல் கண்ணீருடன் தனது மனைவியுடன் பேசுவது போன்று எடுக்கப்பட்ட ஒளிப்படம் சமூக வலைதளத்தில் வைரலாக பரவியது.

இந்த சம்பவம் குறித்து அறிந்த டெல்லி பொலிஸார் ராமைக் கண்டுபிடித்து டெல்லியில் இருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு பீகார் செல்லும் சிறப்பு ரயில் கடந்த வியாழக்கிழமை அனுப்பி வைத்தனர்.


இறுதியாக, தனது சொந்த ஊரான பிகுசாராய்யைச் சென்றடைந்த ராமிற்கு மீண்டும் அதிர்ச்சி காத்திருந்தது. தந்தை வர தாமதமாகியதால் தாங்களே ஒன்றரை வயது மகனுக்கு இறுதிச்சடங்கு செய்து அடக்கம் செய்து விட்டதாக ராமின் குடும்பத்தினர் அவருக்கு ஆறுதல் கூறினர்.

தனது ஒன்றரை வயது மகனின் முகத்தைக் கடைசியாக எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என எண்ணி பல இன்னல்களை சந்தித்து வந்த ராமின் கடைசி ஆசை.

# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்





படம் 1



படம் 2

படம் 1
லனுஜன் நவரட்ணம் - தரம் 3
North Bridlewood Junior Public School,
Scarboough, Canada

படம் 2
ஆர். அஜின் - தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

**நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'சமூக இடைவெளி' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியா ததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட் டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'நினைவேந்தல்'

ம. யதோட்சயன் – தரம் 8
யா/ மத்திய கல்லூரி

இ. கார்த்திகன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

டி. ஹரிஸ்மன் – தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

பா. தனுபன் – தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

டி. அபிலாஷ் – தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

சி. சிவகலை – தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

ஏ. துசுஷிகா – தரம் 8
தி/ சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

விஜயநிதி கருன் – தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

எட்ரியன் லுகி ஜோன் – தரம் 8
ஓகேஜ சர்வதேச பாடசாலை, வத்தளை

பெதனி பிலிப் – தரம் 9
சென் மேரிஸ் கல்லூரி, திருகோணமலை

லீனா பர்ஹான்
கிட்ஸ்வே ஆரம்பப் பாடசாலை, கல்கமுவ

கசிந்திரா கிரிஸ்பின் – தரம் 5
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஞா. ரிசாந் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

தி. கோவெழிலன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா – தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

என். கொட்வின் – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

என். சேர்லின் – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

எஸ். கிருஷ்திகன் – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அன்றியா தசுஷரா காண்டீபன் – தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

காலைக்கதிர் Kalaikathir

## நினைவேந்தல்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

**இன்று (19/05/2020) தலைப்பு நினைவேந்தல்**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# சமத்துவக் கட்சி அலுவலகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு 2020 நேற்று மாலை சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கட்சியின் அலுவலகத்தில் முன்னாள் போராளி ஈழவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச் சுடரை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் ஏற்றி வைத்தார். தொடர்ந்தும் ஏனைய சுடர்களும் ஏற்றி வைக்கப்பட்டு 2009 முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களுக்காக அகவணக்கம் செலுத்தப்பட்டதோடு, மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் போராளிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.





## தமிழினப் படுகொலை நாள் நினைவேந்தல் வல்வெட்டித்துறை ஊறணியில் அனுஷ்டிப்பு

### சிவாஜிலிங்கம் பங்கேற்றார்







வல்வெட்டித்துறை ஊறணியில் தமிழினப் படுகொலை நாள் நினைவேந்தல் நேற்று மாலை சுடரேற்றிக் கடைப்பிடிக்கப் பட்டது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 11 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக எம்.கே.சிவாஜிலிங்கமும் அவரது குழுவும் யாழ்ப் பாணத்தில் இருந்து நேற்றுக் காலை முல்லைத்தீவு செல்ல முயன்ற போது கேரதீவு இராணுவ சோதனை சாவடியில் வழிமறிக்கப்பட்டு திருப்பி அனுஷ்ப்பப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் அவர்கள் யாழ்ப்பாணம் திரும்பி செம்மணி பகுதியில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதன் பின்னர் வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்துக்கு அண்மையில் நாற்பதுக்கும் அதிகமான பொது மக்கள் 1985ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் இன்று மாலை 18 மணி 18 நிமிடங்கள் 18 செக்கனுக்கு நினைவேந்தல் நிகழ்வைச் செய்தனர்.

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் வல்வெட்டித்துறை நகரபிதா உள்பட்ட பொது மக்களும் சமூக இடைவெளியை கடைப்பிடித்து மலர்களைத் தூபி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

இதன்போது நிகழ்வில் பங்கேற்றவர்களை விட இராணுவத்தினரும் சிவில் உடையில் பொலிஸாரும் அதிகளவில் அங்கு வரவழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 10 1955



இறப்பு 31 05 2019

திதி : துவாதசி (19.05.2020)

### திருமதி. யமுனா புண்ணியசீலன்

அன்பு , அக்கறை ,அரவணைப்பு , பாசம் , நேசம் , தியாகம்
என எல்லாவற்றையும் ஊட்டி வளர்த்தாய் அம்மா
உமது அரச வேலையை இடை நிறுத்தி நமது குடும்ப
வளர்ச்சிக்காக உம்மையே ஆகுதியாக்கினீர்கள்.
வெள்ளந்தியான உம் புன்சிரிப்பால் அனைவரையும் கவர்ந்தீர் .
எல்லோரையும் உங்கள் சொந்தம் போல் மதித்து உணவளித்தீர் .
உம் தீடீர் மறைவு எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது .
நாம் வாழும் வரை எம் நெஞ்சில் உம் நினைவுகள் நீங்காமல்
வாழ்ந்து கொண்டே இருக்கும்.

குடும்பத்தினர்
கொழும்பு.

தொ.பே:- 0778855070

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE

உலகெங்குமிருந்து

உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு
சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
இவையனைத்தையும் ஒரே கூரையின்
கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.

உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.

No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# கொரோனாவைக் காரணங்காட்டி மக்கள் முன்னணியினரை தனிமைப்படுத்த முயன்றமை பேரினவாத அரசியல் அராஜகம்!

## பொ.ஐங்கரநேசன் சீற்றத்துடன் கண்டனம்



கொழும்பு,மே19

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், பொதுச்செயலாளர், தேசிய அமைப்பாளர் உட்பட பதினொரு பேரை, கொரோனா நோய்த் தொற்றைக் காரணங்காட்டி வீடுகளில் தனிமைப்படுத்தும் வகையில் நீதிமன்ற உத்தரவு ஒன்றைப் பெறுவதில் காவல்துறை வெற்றி கண்டுள்ளது. இது சுகாதாரம் என்ற போர்வையில் காவல்துறை மேற்கொண்ட முற்றுமுழுதானபேரினவாத அரசியல் அராஜகம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தனது கடுமையான கண்டனத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டுப் பல்வேறு இடங்களிலும் அஞ்சலி செலுத்திவந்த நிலையில் இருவார காலத்துக்குக் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படித்தப்பட வேண்டும்என்று நேற்று முன்தினம்(17.05.2020) நீதிமன்றினால் பணிக்கப்பட்டனர். இது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கண்டனத்தை அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் –

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதல்நாளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சிலர் செம்மணியில் அஞ்சலி செலுத்த முற்பட்ட வேளை, அங்கு பிரசன்னமான காவல்துறையினர் கொரோனாவைக் காரணங்காட்டி அவர்களைத் தனிமைப்படுத்தப் போகிறார்கள் எனச் சூளுரைத்துச் சென்றனர். கொரோனாப் பேரவலத்தின் மத்தியில் மக்கள் கூட்டமாகத் திரள்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஆனால், அங்கு கூடியிருந்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய வெகுசிலரே. அத்தோடு அவர்கள் யாவரும் கொரோனாகால சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்துச் சமூக இடைவெளிகளைப் பேணி, முகக்கவசங்களை அணிந் தவாறே அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

ஓர் அரசியல் கட்சி என்ற வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் பல நூற்றுக்கணக்கானவர்களைத் திரட்டியிருக்கமுடியும். ஆனால், செம்மணியில் மாத்திரம் அல்ல, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் இலங்கைப் படைகளினால. படுகொலைகள் நிகழ்த்திய இடங்களாகப் பதிவாகியுள்ள பல இடங்களிலும் சமூகப் பொறுப்புணர்வுடன், சுகாதார நடைமுறைகளைப் பேணியவாறே அஞ்சலிகளை முன்னெடுத்துள்ளனர். இந்நிலையிலேயே, காவல்துறை அஞ்சலியின் முதல்நாளில் சூளுரைத்தவாறு அஞ்சலித்தவர்களைக் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு ஆளாக்கியுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட வேளைகளில் சுகாதார நடைமுறைகளைப் பேணாமல் மக்கள் பெருந்திரளாகப்பொது இடங்களில் கூடுவதைக் கேள்விக்கு உட்படுத்தாத காவல்துறை, சுகாதார நடைமுறைகளைப் பேணியவாறு மிகமிகக் குறைந்த எண்ணிக்கையில் கூடி அஞ்சலித்தவர்களைக் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு ஆளாக்கியிருப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இறுதிநாளினை மக்கள் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிப்பதைத் தடுப்பதும், மக்கள் மனங்களில் இருந்து முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகளின் பதிவுகளை அழிப்பதுமே ஆகும்.

கொரோனாவைக் காரணங்காட்டி அஞ்சலித்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டாலும், முள்ளிவாய்க்கால் அஞ்சலியில் கடந்த வருடங்களைப் போன்று பல்லாயிரக்கணக்கானோர் திரள்வது தடுக்கப்பட்டாலும் தமிழ் மக்கள் அனைவரும் கூட்டாகத் தங்கள் மனங்களில் அஞ்சலிப்பதைப் பேரினவாத அரசாலும், அதனைத் தூக்கி நிறுத்தி வைத்திருக்கும் அரச படைகளாலும் ஒருபோதும் தடுத்துவிடமுடியாது. முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்து பதினொரு ஆண்டுகள் அல்ல, இன்னும் பலநூறு ஆண்டுகள் கடந்தாலும் மக்கள் மனங்களில் முள்ளிவாய்க்காலில் மூண்ட தீ ஒரு சுடராகவேனும் ஒளிர்ந்து கொண்டேயிருக்கும்.– என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதிக்கு எதிராகப் புகார்



நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் தருணத்தில், அமைச்சுகளுக்கு புதிய ஏழு செயலாளர்களை நியமித்திருக்கின்றமையை ஆட்சேபித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக விசாரணையை ஆரம்பிக்குமாறு, தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகளால் இந்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.



# அனுமதி மறுக்கப்பட்டபோதும் வலி. கிழக்கு பிரதேச சபையில் ஈகைச்சுடரேற்றி அஞ்சலி

யாழ்ப்பாணம், மே. 198

பொலிஸ் அனுமதி மறுப்பு, புலனாய்வாளர்களின் இடையூறுகளின் மத்தியிலும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று காலை 10.30 மணிக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை முன்றலில் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச சபையில் கொரோனா வைரஸ் சுகாதார முன் னெச்சரிக்கையுடன் இடம்பெற தவிசாளரினால் ஏற்பாடாகி யிருந்தது. எனினும் பிரதேச சபைக்கு வருகைதந்த பொலி ஸார் நிகழ்வுகளுக்கு அனுமதியில்லை எனத்தெரிவித்து தடை விதித்தனர்.

இதனைத் தொடர்ந்து தவிசாளரினால், இங்கே சுகாதார ஒழுங்குகள் அனைத்தும் பேணப்பட்டுள்ளன. வரையறுக் கப்பட்ட சிலரே இந்த இடத்தில் நிற்கின்றனர். அவர்கள் சமூக இடைவெளியைப் பேணுகின்றனர். கைகள் கழுவு





வதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது இறந்த வர்களை நினைவு கூர்வதற்கான அனுஸ்டிப்பாகும் இந் நிலையில் எவ்வாறாக தடை யேற்படுத்த முடியும் தவிசாளர் மற்றும் உறுப் பினர்கள் பொலிஸ் தரப்புடன் வாதப்பிரதிவாதங்களில் ஈடு பட்டனர்.

தொடர்ந்து தவிசாளர் தனது வாகனத்தில் இருந்து அஞ்சலி செலுத்துவதற்கான பொருள் களை எடுத்துவந்து எவரும் இன்றித்தான் தனியே அஞ்சலி செலுத்த முற்பட்டார். அதற்கும் பொலிஸ் தரப்பினால் தடைகள் ஏற்படுத்தப்பட்ட நிலையில் இடையூறுகளை மீறி தவிசாளரினால் ஈகச் சுடரேற்றி அஞ்சலிக்கப்பட்டது. அஞ்சலி செலுத்துவதற்காக வருகை தந்திருந்த பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் வளாத் தின் நின்றிருந்த இடத்தில் நின்றவாறு அஞ்சலித்தனர்.

தெடர்ந்து தவிசாளரினால் நாம் எமது உறவுகளை அஞ் சலிக்கின்றோம் இதில் யாரும் தடை ஏற்படுத்த முடியாது. மாறாக மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறல் அநீதிகளுக்கு பொறுப்புச் சொல்லுதலே தேவை என பிரதேச சபை வளாகத்தின் வெளிப்புறத்தில் அங் காங்கே நின்றிருந்தவர்களை நோக்கி உரையாற்றப்பட்டது.

# தென்மராட்சியிலும் நேற்று நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே. 19

முள்ளிவாய்க்கால் படு கொலையின் 11ஆம் ஆண்டு நினைவு தினமான நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தென்மராட்சிப் பிரதேச தலைமைக் காரியாலயத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு மலர் தூவி, சுடரேற்றி சமூக இடைவெளியைப் பேணி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபை யின் முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கூட்டமைப்பின் உறுப்பினர் கள்சிலர்கலந்துகொண்டனர்.

சாவகச்சேரியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் அமரர் ரவிராஜின் உருவச்சிலை அமைந்துள்ள இடத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபோதும் பொலிஸார் மற்றும் இரா ணுவத்தினர் அந்த இடத்தில் குவிக்கப்பட்டுள்ளதால் நிகழ்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத் தில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# ஆலயத்துக்குள் நுழைந்து படமெடுத்த சி.ஐ.டியினர்



வவுனியா, மே. 19

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக் கான ஆத்மசாந்திப் பிரார்த்தனை வவுனியா குட்செட் வீதி கருமாரி அம்மன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது அரசியல்வாதிகள் மற்றும் அந்தணர்கள், சமூக ஆர்வலர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு பிரார்த்தனையை முன்னெடுத் திருந்தனர்.

இந்த நிகழ்வு ஆரம்பமாவதற்கு முன்னரே பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் ஆலயத்துக்கு வெளியில் கடமைகளில் ஈடுபட் டிருந்தனர்.

ஆத்ம சாந்திப் பூசை இடம்பெற்று கொண் டிருந்தபோது ஆலயத்துக்குள் நுழைந்த புலனாய்வுப் பிரிவு அலுவலர் ஒருவர் நிகழ் வையும், நிகழ்வில் கலந்து கொண்டிருந்த வர்களையும் புகைப்படம் எடுத்தார். ஆல யத்துக்குள் நுழைந்து அவர் புகைப்படம் எடுத்தமை அங்கிருந்தவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

நினைவேந்தல் முடிவடைந்த சிறிது நேரத்தில் ஆலயத்துக்கு வருகை மேற்கொண்ட பொலிஸார் நினைவேந்தலை ஒழுங்குபடுத் தியவர்களிடம் விசாரணைகளை மேற்கொண் டதுடன் அவர்களின் பெயர் விவரங்களையும் பதிவு செய்தனர்.





# மன்னாரில் காற்றுடன் கன மழை

## 75 குடும்பங்களைச் சேர்ந்த 254 பேர்கள் பாதிப்பு

மன்னார், மே. 19

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு பெய்த காற்றுடன் கூடிய கனமழை காரணமாக அதிகமான வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் முழு மையாகச் சேதம் அடைந்துள்ளதுடன் தோட்ட செய்கைகள் பாதிப்படைந்துள்ளன.

அத்துடன் அதிகளவான மரங்களும் முறிந்து விழுந்துள்ளன.

நள்ளிரவு 12 மணி தொடக்கம் கடும் இடி யுடன் கூடிய பலத்த மழை பெய்ததை அடுத்து மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலக பிரிவுகளிலும் 75 குடும்பங்களை சேர்ந்த 254 நபர்கள் நேரடியாக பாதிக் கப்பட்டுள்ளனர்.

அவற்றில் மன்னார் நகர் பிரதேச செயலக பிரிவில் 28 குடும்பங்களை சேர்ந்த 91 நபர்க ளும் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவில் 18 குடும்பங்களை சேர்ந்த 60 நபர்களும் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் 13 குடும்பங்களை சேர்ந்த 43 நபர்களும் முசலி முசலி பிரதேசச் செயலாளர் பிரிவில் 8 குடும்பங்களை சேர்ந்த 25 நபர்களும் மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் 6 குடும்பங்களை சேர்ந்த 25 நபர்கள் பாதிக்கப்படுள்ளனர் .

குறிப்பாக ஜீவபுரம், சாந்திபுரம், ஜிம்றோன் நகர், வஞ்சியன் குளம், தரவான்கோட்டை வெள்ளாங்குளம், சிறுநாவற்குளம் உட்பட அதிகளவான கிராமங்களில் வீடுகள் பாடசா லைகள் மற்றும் வர்த்தக நிலையங்களும் சேதம் அடைந்துள்ளது

அதே நேரத்தில் முன்னால் வீடமைப்பு நிர் மாண துறை அமைச்சர் சஜித் பிரேமதாசா வால் வீட்டு திட்டம் வழங்கப்பட்டு முதலாம் இரண்டாம் கட்ட மிகுதி பணம் வழங்கப்படாமல் பழையா வீடும் இன்றி புதிய வீடும் கட்டி முடிக் கப்பாடாத நிலையில் தற்காலிக கொட்டில்களில் வசித்து வந்த அதிகமான மக்கள் இதனால் பாதிப்படைந்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த பாதிப்புகள் ஏற் பட்ட வீடுகளுக்கு கிராம சேவகர் மற்றும் சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் விஜயம் மேற்கொண்டு பாதிப்பு தொடர்பான விபரங்களை சேகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.

வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.

(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)

தொடர்புகளுக்கு: 077 411 4422

புழுக்கொடியல் விற்பனைக்கு.

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.

தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)

தொடர்புகளுக்கு: 076 100 5277

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!

கருப்பு வெள்ளை - ரூபாய் 500/-

முழு வர்ணம் - ரூபாய் 1000/-

தொடர்புகளுக்கு: 076 443 8622

kalaikkathiradvt@gmail.com

# அதிவேக மோட்டார் சைக்கிள்களால் அர்த்தமற்ற இழப்புகளும் மரணங்களும்



## டாக்டர் சத்தியமூர்த்தி கவலை, விசனம் தெரிவிப்பு

யாழ். குடாநாட்டில் தற்போது பல்வேறு வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. குடாநாட்டில் ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் அதிகளவான விபத்துக்கள் மீண்டும் ஏற்பட ஆரம்பித்துள்ளன என யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி கவலை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும் இளைஞர்கள் கடுமையான வீதி விபத்துக்குள்ளாகி அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு சிலரைக் காப்பாற்றவும் முடியாது. அவர்கள் தலையில் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஆகவே குறிப்பாக மோட்டார் சைக்கிளைப் பாவிக்கும் இளைஞர்கள் நகர்ப்புறங்களில் வண்டியை மெதுவாக செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாலை நேரங்களிலும் இரவு நேரங்களிலும் வேகமாகச் செலுத்துவதை தவிர்த்துக்கொள்ளுமாறு இளைஞர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

வீதி விபத்து ஏற்பட்டால் வைத்தியர்களுக்கு சில சமயங்களில் உயிரை காப்பாற்ற கூட முடியாமல் போகின்றது. ஆகவே இது ஒரு துரதிருஷ்டவசமான நிலை.

எங்கள் பகுதியில் கொரோனா தொற்றினால் யாரும் உயிரிழக்கவில்லை. ஆனால் வீதி விபத்துக்களினால் இந்தக் காலப் பகுதியில் சிலர் இறந்து விட்டார்கள். எதிர்வரும் நாள்களிலும் இவ்வாறான நிலை ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் உள் ளன.

குறிப்பாக இளைஞர்கள் மாத்திரமல்லர், மோட்டார் சைக்கிளை வாங்கி வழங்கும் பெற்றோர்களும் இளைஞர்களை அல்லது அவர்களுடைய பிள்ளைகளை மிக மிக அவதானமாக செலுத்துமாறு அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறிப்பாக அவர்கள் அளவுக்கதிகமான வேகத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்துவது மிகவும் ஆபத்தான நிலையை ஏற்படுத்துகின்றது. ஆகவே அவர்கள் வேகத்தைத் தணித்து மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கு பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக தற்பொழுது பாவனையில் இருக்கின்ற மோட்டார் சைக்கிள்கள் மிக வேகத்தில் இலக்கினை அடையக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது பாவனைக்கு வருகின்ற மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றும் அதன் வேகத்தின் அளவு கூடிக்கொண்டே செல்கின்றது.

இளைஞர்கள் அதன் ஆபத்து தெரியாமல் அதிக வேகத்தில் ஓடி தங்களுடைய உயிர்களை தாங்களாகவே மாய்த்துக் கொள்கிறார்கள். இவர்களுக்கும் குடும்பப் பொறுப்பு உள்ளது. இவர்களுடைய எதிர்காலம் எங்கே செல்கின்றது எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

கொரோனா தொற்று நாட்டில் ஏற்பட்ட பொழுது கூட இவர்கள் எவ்வளவு ஒத்துழைப்பினை வழங்கினார்கள். இவர்களை நம்பி இவர்களுடைய பெற்றோர்கள் இருக்கிறார்கள்.

இவ்வாறு அதிக வேகமாக செலுத்தக் கூடிய வகையில் அமைக்கப் பெற்றுள்ள இந்த மோட்டார் சைக்கிள்கள் எங்களுடைய பிரதேசத்துக்கு தேவையில்லை. இது தொடர்பில் உரிய திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாதுகாப்பான மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வது எங்கள் பகுதிக்கு பொருத்தமானதாக இருக்கும். இது தொடர்பில் பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். குழுவொன்றை அமைத்து இதன் முன்னாயத்த நடவடிக்கைகள் எவ்வாறு வீதி விபத்துக்களை தடுக்க முடியும் என்பதில் நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம். – என்றார் அவர்.




# பொலிஸ் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வவுனியாவில் நேற்று நினைவேந்தல்



*வவுனியா, மே. 19*

வவுனியாவில் அக்கினி சிறகுகள் அமைப்பின் ஏற்பாட்டில் முள்ளி வாய்கால் நினைவேந்தல் நிகழ்வு வவுனியா குடியிருப்பு குளத்தடியில் இன்று மாலை நடைபெற்றது.

நிகழ்வுக்கான முன் ஏற்பாடுகள் மேற்கொள்ளபட்டுவந்த நிலையில் அப்பகுதிக்கு வந்த வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தின் உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் ஏற்பாட்டாளர்களை அழைத்து இவ்விடத்தில் நினைவேந்தலை நடத்தவேண்டாம், இது பொதுவான இடம் என்று தெரிவித்திருந்தனர்.

இதனால் பொலிஸாருக்கும் நிகழ்வு ஏற்பாட்டாளர்களுக்கும் இடையில் கடுமையான முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

இன்று இடம்பெறவுள்ள போர் வெற்றிவிழா நிகழ்வை உங்களால் நிறுத்தமுடியுமா என்று பொலிஸாரிடம் கேள்வி எழுப்பிய ஏற்பாட்டாளர்கள், இங்கே கடமையில் நிற்கும் புலனாய்வு பிரிவினர் சமூக இடைவெளியை பின்பற்றியா பணியை மேற்கொள்கின்றனர் என்றும் கேள்வி எழுப்பினர்.

எனினும் இந்தப் பகுதியில் நிகழ்வை நடத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

எனினும் பொலிஸாருடன் ஏற்பாட்டாளர்களில் ஒருவர் பேச்சு நடத்தியதையடுத்து அமைதியாக நிகழ்வு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தமிழர்களைக் கொன்றழித்துவிட்டு போர் வெற்றிக் கொண்டாட்டமா?

## ராஜபக்ஷ அரசிடம் மாவை கேள்விக்கணை

யாழ்ப்பாணம், மே 19

சர்வதேசம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்கம் வீரியம் பெற்றுள்ள நிலையில் இலங்கையில் போர் வெற்றிக் கொண்டாட்டத்தை ராஜபக்ஷ அரசு இன்று நடத்துகின்றது. இறுதிப் போரில் தமிழ் மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்றழித்துவிட்டு போர் வெற்றி விழாவை நடத்துவது நியாயமா?

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

மக்கள் பிரதிநிதிகள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பங்கெடுக்கச் சென்றதை அரச படைகள் தடுத்தமையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மனிதாபிமான நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற வேண்டும் என்பதே எமது வேண்டுகோள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறை தொகுதி கிளைக் காரியாலயத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் யாழ். மாவட்டத் தலைவர் பிருந்தாபன் தலைமையில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதிப் போரில் உயிரிழந்த மக்களை நினைவு கூருவதற்கான நினைவேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க்காலில் நடைபெற்றிருந்தது.

நிகழ்வில் கலந்துகொள்வதற்காக சென்ற வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் உள்ளிட்ட பல மக்கள் பிரதிநிதிகள் இராணுவத்தினரின் சோதனை நிலையங்களில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.




மக்கள் பிரதிநிதிகள் நினைவேந்தலுக்காகச் சென்றமையைத் தடுத்ததை ஏற்றுக்கொள்ள முடியாது. மனிதாபிமான நிகழ்வுகளை செய்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

இதேவேளை, செம்மணியில் நினைவேந்தல் வார நிகழ்வில் பங்கேற்றமைக்காக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட்டவர்களைத் தனிமைப்படுத்த முயற்சித்தமையையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

உலகத்தில் இல்லாத நடவடிக்கைகள் இலங்கையில் இடம்பெறுகின்றன. சர்வதேசம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்கம் வீரியம் பெற்றுள்ள நிலையில் இலங்கையில் போர் வெற்றிக் கொண்டாட்டத்தை ராஜபக்ஷ அரசு நாளை (இன்று) நடத்துகின்றது. இறுதிப் போரில் தமிழ் மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்றொழித்துவிட்டு போர் வெற்றிவிழாவை நடத்துவது நியாயமா?

ஆனால், உயிர்நீத்த எமது உறவுகளை நினைவுகூர இந்த அரசால் தடை ஏற்படுத்தப்படுகின்றது. இதனை ஏற்க முடியாது – என்றார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ப.கஜதீபன் மற்றும் தமிழரசுக் கட்சியின் வாலிபர், மாதர் முன்னணிகளின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## பச்சிலைப்பள்ளியில் சுடரேற்றல்



யாழ்ப்பாணம், மே 19

இறுதி யுத்தத்தில் உயிர்களை இழந்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வு பச்சிலைப்பள்ளி பிரதேச தமிழரசுக்கட்சியினரால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினுடைய தவிசாளர் சுரேன் தலைமையில் 6.18 மணிக்கு இடம்பெற்ற நிகழ்வில் இறுதி யுத்தத்தில் உயிர் நீத்த உறவுகளுக்காக அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலி நினைவுச் சுடர் ஏற்றி மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### பழ.நெடுமாறன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

அஞ்சலி செலுத்தியுள்ளார் பழ.நெடுமாறன் ஐயா.

தமிழினப் படுகொலை உச்சம் தொட்டு நிற்க ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட மே-18 அன்று உலகெங்கும் உள்ள தமிழர்கள் தமிழினப் படுகொலை நாளாக கடைப்பிடித்து நினைவேந்தல்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இம்முறை உலகளாவிய கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சமூக விலக்கு கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் ஒழுங்கு படுத்தப்பட்ட எந்த நினைவேந்தல் நிகழ்வுகளும் செய்யப்படாது அவரவர் இருக்கும் இடங்களில் படுகொலை செய்யப்பட்ட மக்களை மனதில் இருத்தி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தனது பாரியார் உள்ளிட்ட குடும்பத்தினருடன் சென்னை பல்லாவரத்தில் உள்ள தனது வீட்டில் அமைதியான முறையில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

வருடா வருடம் தமிழ்நாடு, தஞ்சாவூரில் உள்ள முள்ளிவாய்க்கால் முற்றத்தில் மே-18 நினைவேந்தல் பழ.நெடுமாறன் ஐயா தலைமையில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

### தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

வாய்க்கால் 11 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள வீடியோ செய்தியொன்றில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்–

பாதிக்கப்பட்டவர்களிடம் நான் கோருவது இதுதான். நம்பிக்கையை ஒரு போதும் இழந்துவிடாதீர்கள். கொல்லப்பட்ட மக்கள் தொடர்பான கதைகளை தொடர்ந்தும் பேசிக்கொண்டிருங்கள். இதன்மூலம் அந்த மரணங்கள் அர்த்தமற்றவையாக மாறுவதைத் தடுக்க முடியும்.

யுத்தத்தின் இறுதியில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கானோரை நினைவுகூரும் மே-18 இந்த நாளில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தைச் சேர்ந்த நானும் எங்கள் சகாக்களும் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

காணாமற்போனவர்களின் உறவினர்கள் குடும்பத்தவர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மோதல் முடிவுக்கு வந்து பல வருடங்களின் பின்னரும் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பது குறித்து இறுதியான, உறுதியான ஓர் எண்ணிக்கையை முன்வைக்க முடியாமலுள்ளமையைக் கொடுமையான ஒரு செயலாக நாங்கள் கருதுகின்றோம்.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு வெறுமனே உயிர் தப்பியவர்களின் ஆவணங்களைப் பதிவு செய்வதை மாத்திரம் மேற்கொள்ளவில்லை. மாறாக யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கான ஆதாரங்கள், தடயங்களை சேகரித்து ஆவணப்படுத்திவருகிறது.

இதன் காரணமாக ஒரு நாள் அவற்றுக்கு காரணமானவர்களை நாங்கள் பொறுப்புக்கூறச் செய்யலாம்.

கடந்த ஐந்து வருடங்களாக நாங்கள் எங்களிடமுள்ள ஆவணங்களைப் பயன்படுத்தி கொலைகளுக்கு காரணமானவர்களின் பெயர்களைப் பகிரங்கப்படுத்தி வருகின்றோம்.

மேலும் நாங்கள் சாத்தியமான சூழ்நிலைகளில் அவர்களுக்கு எதிராக சர்வதேச நியாயாதிக்க எல்லைக்குள் நீதிமன்ற நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

சிலர் வெளிநாடுகளுக்குப் பயணம் செல்லமுடியாத நிலையையும் ஐக்கிய நாடுகள் அமைதிப்படையில் பணியாற்ற முடியாத நிலையையும் உருவாக்குவதில் நாங்கள் வெற்றியடைந்துள்ளோம்.

இலங்கை ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் அவர் முக்கிய பதவிகளுக்கு யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றம்சாட்டப்படும் இராணுவ அதிகாரிகளை நியமித்துள்ளார் என்பதையும் நாங்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளோம் – என்றார்.

### கொரோனா 991...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

இதனால் இலங்கையில் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 991 ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே நேற்று குணமடைந்து 15 கடற்படையினர் இன்று வீடு திரும்பியுள்ளனர். இதனால் கொரோனா தொற்றிலிருந்து முழுமையான குணமடைந்த கடற்படையினர் எண்ணிக்கை 204 ஆக அதிகரித்துள்ளது.

### கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

சிறிதரன் தலைமையில் நேற்று மாலை 5.30 மணிக்கு உணர்வுபூர்வமாக நடைபெற்றுள்ளது.

நாட்டில் தற்போதுள்ள கோரோனா தொற்று அபாயநிலையினைக் கருத்திற்கொண்டு சமூக இடைவெளி பேணப்பட்டு, கைகள் சுத்தப்படுத்தப்பட்டு பாதுகாப்பான முறையில் இது முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பிரதான சுடர் ஏற்றப்பட்டதை அடுத்து நினைவு சுடர்களும் ஏற்றப்பட்டன.

தொடர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மலர் வணக்கமும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.05.2020 இல் வெளியிடப்பெற்றது.